**18.10.2022**

**OS.No. 348/2021 PW : 1,** திருமதி. லதா

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி...**

என் தந்தையின் பூர்வீக ஊர் ஆந்திராவில் உள்ள தெல்லகுண்டா ஆகும். ஆனால் என் தந்தை அங்கே குடியிருக்கவில்லை. என் தந்தை அவரது 10வது வயதிலேயே தெல்லகுண்டாவை விட்டு திருவூருக்கு வந்துவிட்டார். என் தந்தையை என்னுடைய மாமாவான கரிவரத நாயுடு தான் வளர்த்தார் என்றால் சரியல்ல. என் பாட்டி தான் என் தந்தையை வளர்த்தார். ஜெய்சிம்மன் மற்றும் கோவிந்தசாமி நாயுடு ஆகியோர்கள் தான் திருவூரை பூர்வீகமாக கொண்டவர்கள் என்றும் அவர்கள் வீட்டில் தான் என் தந்தை வளர்ந்தார் என்றால் சரியல்ல. என் பாட்டி பெயர் அங்கம்மாள். அங்கம்மாள் கரிவரத நாயுடுவின் அக்கா ஆவார். அங்கம்மாள் வறுமையில் இருந்தார் என்றும் அவரையும் அவரது குழந்தைகளையும் என் தந்தையும் கரிவரத நாயுடு தான் வளர்த்தார் என்றால் சரியல்ல. என் பாட்டி தான் என் தந்தையையும் கரிவரத நாயுடுவையும் வளர்த்தார். என் தந்.தைக்கு பூர்வீக சொத்துக்கள் இல்லை என்றும் திருவூரில் கரிவரத நாயுடுவிற்கு பூர்வீக சொத்துக்கள் இருந்தது என்றும் அதில் தான் என் தந்தை வளர்ந்தார் என்றால் சரியல்ல. கோவிந்தசாமி நாயுடு லட்சுமிதேவியை திருமணம் செய்துள்ளார். பிராதில் ஏ அட்டவனையில் உள்ள சொத்தில் சர்வே எண் 6/2ஏ1-க்குரிய கிரைய ஆவணம் 12.09.1956 தேதியிட்ட கிரைய ஆவணமா என்று கேட்டால் எனக்கு தெரியாது. சர்வே எண். 6/2ஏ1 என் பாட்டி அங்கம்மாள் பெயரில் இருக்கிறது. அங்கம்மாள் அந்த சொத்தில் தனக்குண்டான பாகத்தை

பொறுத்து என் தந்தைக்கு என்னிடம் காட்டப்படும் 1959 வருடத்திய செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதி கொடுத்தாரா என்று எனக்கு தெரியாது. அந்த சொத்தில் ஒருபகுதியான 1 ஏக்கர் 82 சென்ட்-ஐ 1965ம் வருடம் என் தந்தையும், லட்சுமிதேவியும் சேர்ந்து வாங்கினார்களா என்று எனக்கு தெரியாது. சர்வே எண் 6/2ஏ1ல் உள்ள சொத்து எங்கே இருக்கிறது என்று கேட்டால் சொத்துக்கள் அதிகமாக இருப்பதால் சர்வே எண்ணை காட்டி கேட்டால் எனக்கு தெரியாது. 12 ஏக்கர் திருவூரில் இருக்கிறது. சர்வே எண்1/1ஏ1ஏ உள்ள 1.75 ஏக்கர் சொத்து எங்கே இருக்கிறது என்று எனக்கு தெரியாது. அந்த சொத்தை 1986ல் நானும் என் தந்தையும் என் உடன் பிறந்தவர்களும் சேர்ந்து கிரையம் கொடுத்துவிட்டோம் என்றால் சரிதான். அந்த சொத்தில் பிளாட்கள் போட்டு விற்றுவிட்டார்கள். அந்த கிரையம் கொடுத்த சொத்திலும் பாகம்கேட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். அந்த சொத்தை விற்ற பணத்தில் இருந்து தான் என்னையும், பிரேமா, விஜயா ஆகியோர்களை திருமணம் செய்து கொடுத்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. என் திருமணம் 1996ல் நடந்தது. 1986ல் நாங்கள் பவர் கொடுத்தோம் என்றும் அதில் பிளாட்கள் போட்டு 1996ம் வருடம் வரை அந்த சொத்தில் கிரையம் நடந்தது என்றால் சரியல்ல. சர்வே எண் 71/1ல் 15 சென்ட்-ஐ ஜெயசிம்மன் கிரையம் வாங்கியிருக்கிறார் என்று சொன்னால் இருக்கலாம். ரைஸ்மில் இருக்கும் இடத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. சர்வே எண் 71/2, 71/3 உள்ள சொத்துக்கள் என் தந்தை 1976ல் சுயமாக

வாங்கினார் என்று சொன்னால் சரியல்ல. அது கூட்டுகுடும்பத்தில் வாங்கப்பட்டது. சர்வே எண் 71/4ல் உள்ள சொத்து ஜெயசிம்மன் சொத்து என்றும் அது என் தந்தையின் சொத்து இல்லை என்றால் சரியல்ல. கூட்டுகுடும்ப சொத்துக்களின் நான்குமால்கள் எனக்கு தெரியாது. சர்வேஎண் 152/2ஏ1ஏ-லர் உள்ள சொத்து எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது இல்லை என்றும் தவறுதலாக ஏற்பட்ட பட்டாவை வைத்து அந்த சர்வே எண்ணையும் வழக்கில் சேர்த்திருக்கிறேன் என்றால் சரியல்ல. அந்த சர்வே எண்களை கிரைய ஆவணத்தில் தாக்கல் செய்யவில்லை. சர்வேஎண் 30/1ல் உள்ள சொத்தை 1ம் பிரதிவாதி அவருடைய சுயசம்பாத்தியத்தை கொண்டு வாங்கினார் என்றால் சரியல்ல. புட்லூரில் சொத்து எங்கே இருக்கிறது என்று எனக்கு தெரியும். அதன் சர்வே எண் எனக்கு தெரியாது. சர்வே எண் தெரியாவிட்டாலும் என் கணவர் சென்று ஆவணங்களை வாங்கிவந்தார். சர்வே எண்ணை நான் குறிப்பிட்டு தான் என் கணவர் ஆவணங்களை வாங்கிவந்தார். சர்வே எண் 364/1ல் உள்ள சொத்தை என் தந்தையும் கோவிந்தசாமி நாயுடுவும் 1976ல் வாங்கினார்களா என்று எனக்கு தெரியாது. அந்த சொத்தின் நான்குமால்கள் எனக்கு தெரியாது. சர்வே எண் 364/2ஏ2ல் உள்ள சொத்து எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது இல்லை என்றும் அது கோவிந்தாமி நாயுடுவிற்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. கரிவரத நாயுடுவையும், கோவிந்தாமி நாயுடுவையும் வேலை பார்ப்பதற்காக என் பாட்டி அங்கம்மாள் வேறு ஊரிலிருந்து அழைத்து வந்தார். கரிவரத நாயுடுவிற்கும்,

கோவிந்தாமி நாயுடுவிற்கும் பூர்வீகம் திருவூர் குப்பம் என்றால் சரியல்ல. அங்கம்மாள் பெயரில் உள்ள சொத்துக்குளுக்குரிய ஆவணங்களை தாக்கல் செய்திருக்கிறேன். என் தாத்தா பெயரில் சொத்துக்கள் எதுவும் இல்லை. சர்வே எண் 367ல் 8 ஏக்கர் இருக்கிறது. அது என் தந்தையின் சொத்தாகும். சர்வே எண் 368ல் எவ்வளவு சொத்து இருக்கிறது என்று கேட்டால் சர்வே எண்ணை பற்றி எனக்கு தெரியாது. சர்வே எண் 368க்குரிய ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண் 368க்குரிய கிரைய ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை. திருவள்ளூரில் உள்ள சொத்து ஜெயா நகரில் இருக்கிறது. அது இருக்கும் தெருவில் பெயர் தெரியாது. அதனுடைய நீள அகலம் எனக்கு தெரியாது. அதனுடைய மொத்த அளவும் எனக்கு தெரியாது. அதன் சர்வே எண்ணும் எனக்கு தெரியாது. சர்வே எண் தெரியாதபோதும் நான் தான் அந்த சொத்தை பிராதில் கூறியிருக்கிறேன். என் தந்தைக்கு ஆந்திராவில் சித்தூர் மாவட்டத்தில் சொத்து இருக்கிறது. அது கோவனூர் மற்றும் பாவனவாரி கண்டிகை கிராமங்கள் ஆகும். அந்த கிராமங்களில் உள்ள சொத்துக்களுக்குரிய கிரைய ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை. அந்த சொத்துக்களை பார்த்திருக்கிறேன். அதில் மாந்தோப்பு இருக்கிறது. பி அட்டவனை சொத்தில் உள்ள 1வது அயிட்டத்தில் உள்ள ஒவ்வொரு எண்ணையும் சர்வே வாரியாக கேட்டால் சர்வே எண்ணை பற்றி எனக்கு தெரியாது. அதன் மொத்த விஸ்தீரனம் 75 ஏக்கர் ஆகும். சர்வே எண் 33ல் 4.16.00 ஹெக்டர் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அதில்

2 ஏக்கர் தான் இருக்கிறது என்றால் சரியல்ல. அதுவும் எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது இல்லை என்றும் 3ம் நபருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. சர்வே எண் 28/1பில் உள்ள சொத்து 2012ல் ஜெயசிம்மனால் கிரையம் வாங்கப்பட்டது என்று சொன்னால் என் தந்தை எழுதி கொடுத்தார். என் தந்தை கிரையம் கொடுக்கிவில்லை என்றும் ஏ.வி.ரெட்டியும் அவரது மனைவியும் கிரையம் கொடுத்தார்கள் என்று சொன்னால் சரிய்லல. என் தந்தை பவர் ஏஜென்ட் என்ற முறையில் கிரையம் கொடுத்தார்கள். அந்த சர்வே எண்ணில் 4.36.00 ஹெக்டர் இல்லை என்றும் அது 4 ஏக்கர் தான் என்றால் சரியல்ல. சர்வே எண் 28/2ல் உள்ள சொத்தை ஜெயசிம்மன் 2012ல் ஏ.வி.ரெட்டியும் மற்றும் அவரது மனைவியிடம் கிரையம் வாங்கினார் என்றால் சரியல்ல. அதில் 2.62 ஏக்கர் தான் இருக்கிறது என்றால் சரியல்ல. சர்வே எண் 28/3ல் உள்ள சொத்தை ஜெயசிம்மன் 2012ல் ஏ.வி.ரெட்டியும் மற்றும் அவரது மனைவியிடம் கிரையம் வாங்கினார் என்றால் சரியல்ல. சர்வே எண் 30/10க்குரிய கிரைய ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை. சர்வே எண் 30/10க்கு ஜெயசிம்மன் பெயரில் தான் பட்டா இருக்கிறது. சர்வே எண் 9/2ல் உள்ள சொத்து என் தந்தையின் சொத்து இல்லை என்றும் கோவிந்தசாமி நாயுடு மகன் பூபதியுடைய சொத்து என்றால் சரியல்ல. சர்வே எண் 26/2பி 1ம் பிரதிவாதியின் சுயசம்பாத்திய சொத்து என்றால்சரியல்ல. என் தந்தை 1ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த சொத்தாகும். அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை. அந்த சர்வே எண்ணில் 6

ஏக்கர் தான் இருக்கிறது என்றால் சரியல்ல. அந்த சொத்திற்கு நான்கு எல்லைகள் தெரியாது. நான் 5ம் வகுப்புவரை பெரம்பூர் சென்மேரிஸ் பள்ளியில் படித்தேன். அதன்பிறகு ஜெயா கான்வென்ட்டில் படித்தேன். என்னை ஜெயசிம்மன் பள்ளியில் சேர்த்து படிக்க வைத்தார் என்றால் சரியல்ல. ஜெயசிம்மன்க்கு தான் ரைஸ்மில் இருந்தது என்றும் அதிலிருந்து வருமானம் வந்தது என்றால் சரியல்ல. ஜெயசிம்மன் ரைஸ்மில்லில் இருந்து வந்த வருமானம் மற்றும் வேர்கடலை வாங்கி தொழில் செய்தார் என்றும் அதிலிருந்து அவர் எங்களையும், என் தந்தையும் பராமரித்தார் என்றால் சரியல்ல. என்னுடைய பாட்டி அங்கம்மாளின் தம்பிகள் தான் கரிவரத நாயுடு, கோவிந்தசாமி நாயுடு ஆவார்கள். அவர்கள் இருவருக்கும் திருவூர் குப்பத்தில் ஏற்கனவே 20 ஏக்கர் வரை பூர்வீக சொத்துக்கள் இருந்தது என்றால் சரியல்ல. கோவிந்தசாமியின் மகன் பூபதியின் மனைவி தான் 2ம் பிரதிவாதி ஆவார். என்னுடைய முதல் விசாரணையின் 4வது பாராவில் கடைசியில் உள்ள விவரங்களை நான் பிராதில் கூறவில்லை என்றால் சரியல்ல. திருவூர் குப்பத்தில் ஜீவா என்ற பஞ்சாயத்து தலைவர் இருக்கிறார். என் தந்தை உயிருடன் இருந்தபோது அவரிடம் சென்று பாகம் கேட்டோம். என் தந்தை எங்களுடைய திருமணம் செலவிற்கு பட்ட கடன்களை அடைத்துவிட்டதாகவும் அதில் எங்களுடைய பாகம் சரியாகவிட்டது என்று சொல்லிவிட்டார் என்றால் சரியல்ல. நான் ஊத்துக்கோட்டையில் நகை கடை வைத்திருந்தேன். தற்போது இல்லை. நகை கடையில் நஷ்டம் ஏற்பட்டுவிட்டது என்றும் அதனால் 1ம்

பிரதிவாதி எனக்கு ரூபாய் 5 லட்சம் கொடுத்தார் என்றால் சரியல்ல. சுப்பா நாயுடு கண்டிகை என்ற கிராமத்தில் நானும் என் கணவரும் 3 ஏக்கர் சொத்து வாங்கியிருக்கிறோம். அது எங்கள் சுயசம்பாத்திய சொத்தாகும். என் தந்தை எனக்கும் என் சகோதரிகளுக்கும் வேண்டிய பாகத்தை ஏற்கனவே கொடுத்துவிடடார் என்றும் ஆகவே 1ம் பிரதிவாதி, ஜெயசிம்மன், பூபதி ஆகியோர்களுக்கு ஒரு உயில் எழுதி வைத்துவிட்டார் என்றால் சரியல்ல. 2009லேயே என் தந்தை உயிருடன் இருக்கும்போதே பாகம் செய்து ஜெயசிம்மன் உள்ளிட்ட அனைத்து பாகஸ்தர்களும் தனித்தனியாக அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. என் தந்தை இறந்த 5வது நாளில் என் அண்ணன் உயிலை அனைவர் முன்பு படித்துகாட்டினார் என்றால் சரியல்ல. அதை நான் தெரிந்து கொண்டு நான் இவ்வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. பழிவாங்க வேண்டும் என்பதற்காக நான் இவ்வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. பிராது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**11, 12 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று மேற்குறிப்பு செய்யப்பட்டது.**

Sd/- S. Ganapathisamy,
I Additional District and Sessions Judge,
Tiruvallur.